# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 48/மா/2022**

**நாள் : 27 .9.2022**

திரு. சி. வேல்முருகன்,
சென்னை – 600 099. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 3,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கொளத்தூர், டீச்சர்ஸ் காலனி, சந்தோஷ் நகர், 4வது தெரு, ஆர்.ஆர்.ஹோம்ஸ், பிளாட் எண்.ஜி.1, எண்.26 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சி. வேல்முருகன் என்பவர் சார்பாக திரு. கே.வி.வெங்கட்டரத்னம் என்பவரது 6.3.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 37/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மனுதாரரின் முறையீட்டு மனு, பெருநகர சென்னை மாநகராட்சியின் 3வது மண்டல அலுவலரின் அறிக்கை, மற்றும் விசாரணையின்போது அம்பத்தூர் இணை சார்பதிவாளர் மற்றும் மாதவரம் வட்டம், தலைமையிட துணை வட்டாட்சியர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி 3வது மண்டல அலுவலர் ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, 20.06.2019 அன்று ஆணை எண்.037/மா/2019 வெளியிடப்பட்டது :

2) அவ்வாணையினை எதிர்த்து திரு. G. கோபால் மற்றும் இருவர் தொடுத்த நீதிப்பேராணை மனு எண்.30708/2019-ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 7.2.2022 அன்று பின்வருமாறு ஆணை பிறப்பித்துள்ளது.

**" 8. xxx xxx xxx**

**Admittedly, Velmurugan made a complaint against Gopal, Saroja and Valliammal and without issuing any notice, 1st respondent passed the impugned order, which is liable to be set aside. Hence the matter is remanded to the 1st respondent (The Ombudsman, TNLBO) for hearing the matter afresh and pass appropriate orders on merits and in accordance**

**with law after affording an opportunity of hearing to the petitioner as well as the private respondents.**

மேற்குறிப்பிட்டுள்ள மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க மனுதாரரின் முறையீட்டு மனு மீண்டும் (afresh) பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை :**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க திரு. G. கோபால், திருமதி. சரோஜா மற்றும் வள்ளியம்மாள் ஆகியோரையும் மற்றும் திரு. C. வேல்முருகனையும் **6.6.2022** அன்று விசாரணைக்கு ஆஜராக இம்முறைமன்ற அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. இம்முறைமன்றத்தில், **6.6.2022** அன்று நடைபெற்ற விசாரணைக்கு திரு. G. கோபால், திருமதி. G. சரோஜா மற்றும் திருமதி. G. வள்ளியம்மாள் ஆகிய மூவரும் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை இம்முறைமன்றத்தில் அளித்தனர்.

"சென்னை கொளத்தூரைச் சேர்ந்த திரு. வேல்முருகன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் அளித்திருந்த முறையீட்டு மனுவின் மீதான **20.6.2019** நாளிட்ட ஆணையில் திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தாலுக்கா, கதிர்வேடு கிராமத்தில் எங்களுக்கு சொந்தமான சர்வே எண் **107/1 D1** மற்றும் **109/5 A1 A1** என்கின்ற இடத்தில் அமைந்துள்ள இடத்தை மாநகராட்சிக்கு தானமாக கொடுக்கப்பட்டதாகவும், மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி இடத்தை போலி ஆவணங்களை தயார் செய்து விற்பனை செய்ய முயன்றவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும், போலியாக உருவாக்கப்பட்ட ஆவணங்களை ரத்து செய்திட வேண்டும் என தெரிவித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட ஆணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் எங்களிடமும் விசாரணை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் தனது உத்தரவு நாள் 7.2.2022-ல் (WP No. 30708 of 2019 and WMP Nos. 30787 and 30789 of 2019) ஆணை பிறப்பித்துள்ளதையொட்டி, மேற்கண்ட நாங்கள் மூவரும் இம்முறை மன்றத்தில் ஆஜராகி எங்களது பின்வரும் வாக்குமூலத்தை இம்முறை மன்றத்தில் பதிவு செய்கிறோம்.

மேற்கண்ட திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தாலுக்கா, கதிர்வேடு கிராமத்தில் எங்களுக்கு சொந்தமான சர்வே எண் **107/1D1** மற்றும் **109/5A1A1** இடத்தை எங்களுக்குத் தெரியாமல், எங்களது கையொப்பம் பெற்று அவ்விடத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்தும், ஒரு பகுதியை மாநகராட்சிக்கு தானமாக அளித்துமுள்ளனர். எனவே, எங்களுக்கு சொந்தமான மேற்கண்ட இடம் தொடர்பாக மேற்கண்ட நாங்கள் மூவரும் மற்றும் எங்களது சொந்தங்களான மூவரும் மொத்தம் **6** பேர் சேர்ந்து, பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் (வழக்கு எண் O.S. No. **120/2015**) மேலும் மேற்கண்ட எங்கள் மூவரில் ஒருவரான கோபால் அவர்களால் திருவெற்றியூர் முனிசிப் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, (வழக்கு O.S. No. **264/2013**) மேற்கண்ட இரு வழக்குகளும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மேற்கண்ட புகார் மனு தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் சார் பதிவாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-3ன் மண்டல அலுவலர் ஆகியோரை 4.7.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் சார்பதிவாளர் 4.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

சார் பதிவாளர் அலுவலகத்தில் பதியப்படும் ஆவணங்கள் குறித்த வில்லங்கச் சான்று 2001-ஆம் ஆண்டு முதல் கணினி வழியில் பதிவு செய்யப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக கொடுக்கப்பட்ட கதிர்வேடு கிராமத்தில் அமைந்துள்ள மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் 15.12.1999ல் பத்திரம் பதிவு செய்யப்பட்டது.

தற்போது இந்நேர்வு குறித்து சார் பதிவாளர் விசாரணை மேற்கொண்டு, மேற்கண்ட இடம் தொடர்பாக ஆவண எண்கள் 13756/2011 மற்றும் 10341/2011 ஆகிய ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற குறிப்பினை, பத்திரப் பதிவு ஆவணத்தின் கடைசி பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மேலும் இதன் மீதான தொடர் நடவடிக்கை ஏதும் சார் பதிவாளர் அலுவலகத்தால் எடுக்கப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 3ன் மண்டல அலுவலர் 4.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக கொடுக்கப்பட்ட கதிர்வேடு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ரங்கா அவென்யூ என்கின்ற இடத்தில் சுமார் 2782 சதுர மீட்டர் அளவுள்ள பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை சுற்றி சுற்றுச் சுவர் அமைத்திடவும் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிதி கோரப்பட்டது. ஆனால், மேற்கண்ட சுற்றுச் சுவர் மற்றும் அபிவிருத்திப் பணிகளை அமைத்திட நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் அத்திட்டம் ரத்து செய்யப்பட்டது. தற்போது மீண்டும் சுற்றுச் சுவர் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 73 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு TUFIDCO நிறுவனத்திடம் நிதி கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் சுற்றுச் சுவர் மற்றும் அபிவிருத்திப் பணிகள் அமைத்திடும் பணி மேற்கொள்ளப்படும் என்கின்ற விவரத்தையும் மேலும் மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் தற்போது இல்லை என்கின்ற விவரத்தையும், அந்த இடத்திற்கான பெயர் மாற்றமோ அல்லது விற்பனையோ ஏதும் நடைபெறவில்லை எனவும், எவ்வித பத்திரப் பதிவு நடவடிக்கையும் நடைபெறவில்லை என்கின்ற விவரத்தை தெரிவித்து, மேற்கண்ட இடம் மாநகராட்சியின் பாதுகாப்பில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட மாநகராட்சிக்கு சொந்தமான ஸ்ரீ ரங்கா அவென்யூ என்கின்ற இடத்தில் உள்ள சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை சிலர் போலி ஆவணங்களை தயாரித்து வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பட்டா பெற்றுள்ளதைத் தொடர்ந்து, மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு தனியர்கள் போலி பட்டா பெற்றிருப்பின் அதனை ரத்து செய்திட வேண்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 10.7.2019 மற்றும் 21.2.2020 ஆகிய நாட்களில் கடிதம் அனுப்பப்பட்டு வட்டாட்சியரிடமிருந்து எவ்வித பதிலும் மண்டல அலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் இது தொடர்பாக வட்டாட்சியருக்கும் வருவாய் கோட்டாட்சியருக்கும் நேர்முகக் கடிதம் மூலம் மேற்கண்ட போலி பட்டா குறித்து விவரங்கள் விரைவில் கேட்டறியப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட சாலைகள் தொடர்பாக போலியாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடர வேண்டி 10.8.2019ல் காவல்துறையிடம் கடிதம் அளிக்கப்பட்டு, காவல் துறையால் நில அபகரிப்பு தொடர்பாக குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விசாரணை நடைபெற்று

வருகிறது. இதன் தற்போதைய நிலை குறித்து காவல் துறைக்கு இன்னும் ஓரிரு நாளில் கடிதம் அனுப்பப்படும் என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனு தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் வட்டம், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் மற்றும் மனுதாரர் திரு. சி. வேல்முருகன் சார்பில் 8.5.2019 அன்று ஆஜரான திரு.** K.V. **வெங்கடரத்தினம் ஆகியோரை 4.8.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் வட்டம், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் 4.8.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.**

**திரு.** K.V. **வெங்கடரத்தினம் 4.8.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி, தனது வாக்குமூலத்தில்:**

எனது 6.3.2019 நாளிட்ட மனுவில் வேண்டியுள்ளவாறு, அம்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் போலியாக பதிவு செய்யப்பட்ட 10341/2011 என்ற விடுதலை பத்திரத்தையும், 13756/2011 என பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தையும், அதன் அடிப்படையில் மாதவரம் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டாவையும் (பட்டா எண்.3576) ரத்து செய்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இம்முறைமன்றத்தில் என்னால் நேரடியாக அளிக்கப்பட்ட எனது 8.5.2019 நாளிட்ட வாக்குமூலத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. எனவே, அதனையே, இன்றைய (4.8.2022) தினம் அளித்த வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படியும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனு தொடர்பாக பெருநகர சென்னை மாநகர்ாட்சி, திருவள்ளூர், மாதவரம் துணை வட்டாட்சியர் (தேர்தல்) அவர்கள் 8.8.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது பின்வரும் வாக்குமூலத்தை அளித்தார்.**

மனுதாரர் திரு. வெங்கடரத்தினம் என்பவர் இம்முறை மன்றத்தில் அளித்துள்ள முறையீட்டு மனுவில் கண்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் வட்டம் கதிர்வேடு கிராமத்தில் சர்வே எண்கள் 102/A, 102/3, 102/4A, 107/4D, 109/5A 1A-ல் ஸ்ரீ ரங்கா அவென்யூ என்கின்ற மனை பிரிவுக்கு அளிக்கப்பட்ட பட்டா குறித்த விவரங்கள் மற்றும் கோப்புகளை ஒரு வார காலத்திற்குள்ளோ அல்லது இம்முறை மன்றத்தால் அளிக்கப்படும் வேறொரு விசாரணை நாளன்றோ சமர்ப்பிக்கிறேன் என இம்முறை மன்றத்தில் உறுதியளித்து தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

**மாதவரம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் கோரிக்கையை ஏற்று 18.8.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராக கோரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி, திருவள்ளூர், மாதவரம் துணை வட்டாட்சியர் (தேர்தல்) 18.8.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு அளித்துள்ளார்:**

மனுதாரர் திரு. வெங்கடரத்தினம் என்பவர் இம்முறை மன்றத்தில் அளித்துள்ள முறையீட்டு மனுவில் கண்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் வட்டம் கதிர்வேடு கிராமத்தில் சர்வே எண்கள் 107/4D மற்றும் 109/3A1, 109/5A 1A ல் ரங்கா அவென்யூ என்கின்ற மனை பிரிவுக்கு அளிக்கப்பட்ட பட்டா குறித்த பதிவேடுகள் மற்றும் மூல கோப்புகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வழக்கு எண் 264/2013 (தற்போது வழக்கு எண் 127/2020) வரும் 24.8.2022 அன்று மாதவரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது என்பதையும், பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வேறொரு வழக்கு

எண். O.S.No.120/2015-ன் தற்போதைய நிலை மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மற்றொரு வழக்கான Crl. O P No. 17210 of 2013 ஆகியவற்றின் நிலையை அறிய இயலவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான பதிவேடுகள் ஏதேனும் கிடைக்கப்பெற்றால், அதனை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் மாதவர வட்டாட்சியரின் 18.8.2022 நாளிட்டு இம்முறை மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்திருந்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, திருவள்ளூர், மாதவரம் வட்டாட்சியரின் 18.8.2022 நாளிட்ட அறிக்கையில்:**

சென்னை – 600 099, கொளத்தூர், டீச்சர்ஸ் காலனி, சந்தோஷ் நகர், 4-வது தெரு, ஆர்.ஆர். ஹோம்ஸ் பிளாட் எண்.ஜி1, கதவு எண்.26 என்ற முகவரியில் வசிக்கும் வேல்முருகன் அவர்களின் சார்பாக திரு. கே.வி. வெங்கடரத்னம் என்பவரது 06.03.2019 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்திருந்த புகார்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு மு.ம.எண்.037/மா/2019 நாள்:20.6.2019-ல் கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டது.

1) ஸ்ரீரங்கா அவின்யூ, மனைப்பிரிவில் சாலைகள், பூங்கா மற்றும் பொது உபயோகத்திற்காக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அங்கீகாரம் பெற்ற அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிலம் ஆவண எண்.5763/1999-ன்படி அம்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக எழுதிக்கொடுக்கப்பட்டு புழல் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு 2011-ல் மேற்படி இடம் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதால் தற்பொழுது கடந்த 2011-ஆம் ஆண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி நிலத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புலங்களை போலியான உறவுகளுக்குள் உருவாக்கப்பட்ட ஆவண எண்.10341/2011 என்ற எண்ணிட்ட விடுதலைபத்திரம் மற்றும் ஆவண எண்.13756/2011 என்ற எண்ணிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் ஆகியவற்றினை இரத்து செய்ய வேண்டும் எனவும்,

2) மேற்படி புலங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட பட்டா எண்.3576 ரத்து செய்யப்பட வேண்டும் எனவும்,

3) மேற்படி போலியான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நபர்கள் மீது உரிய விதிமுறைகளை பின்பற்றி குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும்,

4) மேற்படி புலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பட்டா பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மேலும்

5) பூங்கா அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட மேற்படி இடத்தில் பூங்கா அமைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

மேற்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் முறையீட்டு மனு எண்.037/மா/2019 நாள்:20.06.2019-ல் வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து சென்னை – 600 099. லட்சுமிபுரம் போஸ்ட் புத்தகரம் கிராமம் விநாயகர் கோயில் தெரு கதவு எண்.14-ல் வசிக்கும் திரு. கணேசன் ரெட்டியார் அவர்களின் மகன் ஜி. கோபால், கணேசன் ரெட்டியார் அவர்களின் மகள் சரோஜா மற்றும் கணேசன் ரெட்டியார் அவர்களின் மனைவி திருமதி. வள்ளியம்மாள் ஆகிய மூவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண்.30708/2019 தொடுத்து, அதில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் முறையீட்டு மனு எண்.037/மா/2019 நாள்: 20.06.2019-ல் வழங்கப்பட்ட தீர்ப்பினை ரத்து செய்ய வேண்டும் எனவும், அவர்கள்

ஏற்கெனவே இது குறித்து பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் தொடுத்துள்ள மூல மனு எண்.120/2015-ல் தீர்ப்பு வரும் வரையில் இதில் மேல் விசாரணையினை நிறுத்திவைக்க வேண்டும் எனவும் மேலும் மேற்படி உத்தரவிற்கு இடைக்கால தடை விதிக்கவேண்டும் எனவும் வருவாய் கோட்ட ஆட்சியர் அவர்களின் விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

மேற்படி நீதிப்பேராணையில் சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 07.02.2022 அன்று கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பித்திருந்தது.

8. "Since no adverse order is being passed against the 2nd respondent, notice to the 2nd respondent is dispensed with. Considering the facts and circumstances of the case and the fact that the 2nd respondent made a complaint before the 1st respondent / Ombudsman against the Zonal Officer, Madhavaram and made a claim that the said land was plotted out and executed a gift deed in favour of local body, however, the 2nd respondent claims that the previous land owners Gopal, one Saroja and Valliammal executed a release deed vide document No.10341 of 2011 and registered the document vide document No.13756 of 2011 which are fake in nature created by the petitioners and they tried to sell the property to some third parties and seeks indulgence of this Court to take appropriate action against Gopal, Saroja and Valliammal and further made a request to maintain the part of the property which was gifted. However, the 1st respondent without issuing any notice to said Gopal, Saroja and Valliammal passed an order which is non est in law. Admittedly, Velmurugan made a complaint against Gopal, Saroja and Valliammal and without issuing any notice, 1st respondent passed the impugned order, which is liable to be set aside. Hence the matter is remanded to the 1st respondent for hearing the matter afresh and pass appropriate orders on merits and in accordance with law after affording an opportunity of hearing to the petitioner as well as the private respondents.

9. With above observation and directions this Writ Petition is allowed. No costs, Consequently, connected Miscellaneous Petitions are closed."

திருவள்ளூர், மாதவரம் வட்டாட்சியர் மேலும் தனது அறிக்கையில், இந்நேர்வில் மேற்படி மாதவரம் வட்டம், கதிர்வேடு கிராமத்தில் கீழ்க்கண்ட புலங்களுக்கு பட்டா எண்.3576-ன்படி கடந்த 2012-ம் ஆண்டில் பட்டா வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் மேற்படி முடிவுற்ற கோப்பு இவ்வலுவலக பதிவறையில் கிடைக்கப்பெறவில்லை. இந்நேர்வில் மேற்படி தவறான முறையில் பட்டா பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படும் திருவாளர்கள் கோபால், சரோஜா மற்றும் வள்ளியம்மாள் ஆகியோர் மேற்படி பொருள் தொடர்பாக தாக்கல் செய்திருந்த மூல மனு எண்.O.S.No.264/2013 (District Munsif Court, Thiruvottiyur) தற்போது மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மாதவரத்திற்கு மாற்றப்பட்டு புதியதாக மூல மனு எண்.127/2020 வழங்கப்பட்டு தற்பொழுது அந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. அவ்வழக்கு 24.08.2022 நாளுக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இது தவிர Sub Court, Poonamallee-ல் திருவாளர்கள் கோபால் மற்றும் ஐவர் எதிர்மனுதாரர்களாக திருவாளர்கள் திருப்பாத்தையா மற்றும் 49 நபர்களை பிரதிவாதிகளாக சேர்த்து மூல மனு எண்.120/2015 தாக்கல் செய்துள்ளனர். அந்த மனுவின் தற்போதைய நிலையினை அறிய இயலவில்லை. அதனை திருவாளர்கள் கோபால் மற்றும் ஐவரிடமிருந்து கேட்டு அறிந்து கொள்ளலாம். மேற்படி இரு மூல மனுக்கள் தவிர திரு. கோபால் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் Crl.O.P.No.17210 of 2013 தாக்கல் செய்துள்ளார்கள். அந்த வழக்கின் தற்போதைய நிலையினையும் அறிய இயலவில்லை எனவும் மேற்காணும் தகவல்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நிலுவையில் உள்ள முறையீட்டு மனு எண்.37/மா/2019-ல் தக்க உத்தரவு பிறப்பிப்பதற்காக சமர்ப்பிக்கப்படுகிறது

என்றும் மேற்படி புலங்களுக்காக வழங்கப்பட்ட பட்டா நகல் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

திரு. G. கோபால், திருமதி. G. சரோஜா மற்றும் திருமதி G. வள்ளியம்மாள் ஆகியோரது வாக்குமூலம், மனுதாரர் திரு. சி.வேல்முருகன் சார்பில் ஆஜரான திரு. K.V. வெங்கடரத்தினம் என்பவரது வாக்குமூலம், அம்பத்தூர் சார் பதிவாளரது வாக்குமூலம், மண்டலம்-3ன் மண்டல அலுவலரது அறிக்கை மற்றும் வாக்குமூலம், மாதவரம் வட்ட தலைமையிடத்துத் துணை வட்டாட்சியரது அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின்படி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவை கண்டறியப்பட்டன:

திரு.கோபால், திருமதி. சரோஜா மற்றும் திருமதி. வள்ளியம்மாள் ஆகியோர் திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தாலுக்கா, கதிர்வேடு கிராமத்தில் தங்களுக்கு சொந்தமான சர்வே எண் 107/1D1 மற்றும் 109/5A1A1 இடத்தை தங்களுக்குத் தெரியாமல், தங்களது கையொப்பம் பெற்று அவ்விடத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்தும், ஒரு பகுதியை மாநகராட்சிக்கு தானமாக அளித்துமுள்ளனர். எனவே, தங்களுக்கு சொந்தமான மேற்கண்ட இடம் தொடர்பாக மேற்கண்ட நாங்கள் மூவரும் மற்றும் எங்களது சொந்தங்களான மூவரும் மொத்தம் 6 பேர் சேர்ந்து, பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் (வழக்கு எண் O.S. No. 120/2015) மேலும் மேற்கண்ட தங்கள் மூவரில் ஒருவரான கோபால் அவர்களால் மாவட்ட முனிசிப் திருவற்றியூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, (வழக்கு எண் O.S. No. 264/2013) மேற்கண்ட இரு வழக்குகளும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன என்பது திரு. கோபால் மற்றும் இருவரின் வாக்குமூலத்திலிருந்து தெரியவருகிறது.

சார் பதிவாளர் அலுவலகத்தில் பதியப்படும் ஆவணங்கள் குறித்த வில்லங்கச் சான்று 2001-ஆம் ஆண்டு முதல் கணினி வழியில் பதிவு செய்யப்படுகின்றன என்பதும், உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக கொடுக்கப்பட்ட கதிர்வேடு கிராமத்தில் அமைந்துள்ள மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் 15.12.1999ல் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்பதும் தற்போது இந்நேர்வு குறித்து சார் பதிவாளர் விசாரணை மேற்கொண்டு, மேற்கண்ட இடம் தொடர்பாக ஆவண எண்கள்: 13756/2011 மற்றும் 10341/2011 ஆகிய ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற குறிப்பினை, பத்திரப் பதிவு ஆவணத்தின் கடைசி பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மேலும் இதன் மீதான தொடர் நடவடிக்கை ஏதும் சார் பதிவாளர் அலுவலகத்தால் எடுக்கப்படவில்லை என்பதும் அம்பத்தூர் சார்பதிவாளர், அவர்களின் வாக்குமூலத்தின் மூலம் தெரியவருகிறது.

உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக கொடுக்கப்பட்ட கதிர்வேடு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ரங்கா அவென்யூ என்கின்ற இடத்தில் சுமார் 2782 சதுர மீட்டர் அளவுள்ள பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை சுற்றி, சுற்றுச் சுவர் அமைத்திடவும் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிதி கோரப்பட்டது என்றும் ஆனால், மேற்கண்ட சுற்றுச் சுவர் மற்றும் அபிவிருத்திப் பணிகளை அமைத்திட நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் அத்திட்டம் ரத்து செய்யப்பட்டு, தற்போது மீண்டும் சுற்றுச் சுவர் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 73 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு TUFIDCO நிறுவனத்திடம் நிதி கோரப்பட்டுள்ளதும், மேற்கண்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் சுற்றுச் சுவர் மற்றும் அபிவிருத்திப் பணிகள் அமைத்திடும் பணி மேற்கொள்ளப்படும் என்பதும் மேலும் மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் தற்போது இல்லை என்பதும் அந்த இடத்திற்கான பெயர் மாற்றமோ அல்லது விற்பனையோ ஏதும் நடைபெறவில்லை எனவும், எவ்வித பத்திரப் பதிவு நடவடிக்கையும் நடைபெறவில்லை என்பதும் மேற்கண்ட இடம் இப்போது மாநகராட்சியின் பாதுகாப்பில் உள்ளது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-3ன் மண்டல அலுவலரின் வாக்கு மூலத்திலிருந்து தெரியவருகிறது.

மேலும், மேற்கண்ட மாநகராட்சிக்கு சொந்தமான ஸ்ரீ ரங்கா அவென்யூ என்கின்ற இடத்தில் உள்ள சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை சிலர் போலி ஆவணங்களை தயாரித்து வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பட்டா பெற்றுள்ளதைத் தொடர்ந்து, மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு தனியர்கள் போலி பட்டா பெற்றிருப்பின் அதனை ரத்து செய்திட வேண்டி வட்டாட்சியர் அலுவகத்திற்கு 10.7.2019 மற்றும் 21.2.2020 ஆகிய நாட்களில் கடிதம் அனுப்பப்பட்டு வட்டாட்சியரிடமிருந்து எவ்வித பதிலும் மண்டல அலுவலகத்தில் பெறப்படவில்லை என்பதும், மேலும் இது தொடர்பாக வட்டாட்சியருக்கும், வருவாய் கோட்டாட்சியருக்கும் நேர்முகக் கடிதம் மூலம் மேற்கண்ட போலி பட்டா குறித்து விவரங்கள் விரைவில் கேட்டறியப்படும் என்பதும் மேலும் மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட நிலங்கள் தொடர்பாக போலியாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடர வேண்டி 10.8.2019 காவல்துறையிடம் கடிதம் அளிக்கப்பட்டு, காவல் துறையால் நில அபகரிப்பு தொடர்பாக குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது என்பதும் இதன் தற்போதைய நிலை குறித்து காவல் துறைக்கு கடிதம் இன்னும் ஓரிரு நாளில் கடிதம் அனுப்பப்படும் என்பதையும் பெருநகர சென்னை மாநகராட்சி 3வது மண்டல அலுவலரது வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரர் திரு. வெங்கடரத்தினம் என்பவர் இம்முறை மன்றத்தில் அளித்துள்ள முறையீட்டு மனுவில் கண்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் வட்டம் கதிர்வேடு கிராமத்தில் சர்வே எண்கள் 107/4D மற்றும் 109/3A1, 109/5A 1A ல் ரங்கா அவென்யூ என்கின்ற மனை பிரிவுக்கு அளிக்கப்பட்ட பட்டா குறித்த பதிவேடுகள் மற்றும் மூல கோப்புகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்பதும் மேலும், திரு. G. கோபால் மேற்படி பொருள் தொடர்பாக தாக்கல் செய்திருந்த மூல மனு எண்.264/2013 (O.S.No. 264/2013) (District Munsif Court, Thiruvottiyur) தற்போது மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மாதவரத்திற்கு மாற்றப்பட்டு புதியதாக மூல மனு எண்.127/2020 வழங்கப்பட்டு தற்பொழுது மேற்கண்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்பதும் அவ்வழக்கு 24.08.2022 நாளுக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்றும், இது தவிர Sub Court, Ponneri-ல் திருவாளர்கள் கோபால் மற்றும் ஐவர் மனுதாரர்களாகவும் திருவாளர்கள் திருப்பாத்தையா மற்றும் 49 நபர்களை பிரதிவாதிகளாக சேர்த்து மூல மனு எண்.120/2015 O.S.No.120/2015 தாக்கல் செய்துள்ளதும் மேற்படி இரு மூல மனுக்கள் தவிர திரு. கோபால் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் Crl.O.P.No.17210 of 2013 தாக்கல் செய்துள்ளதும் மாதவரம் துணை வட்டாட்சியரின் வாக்குமூலம் வாயிலாக தெரியவருகிறது.

மேற்படி ஸ்ரீரங்கா அவின்யூ மனைபிரிவில் சாலைகளுக்காக 10,560 சதுரமீட்டர் நிலமும் மற்றும் பூங்காவிற்கான 2782 சதுரமீட்டர் நிலமும் ஆக மொத்தம் பொது உபயோகத்திற்காக 13,342 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட சட்டத்தின், பிரிவு 2(36)ல் பொதுப்பயன்பாடு (Public purpose) என்பதற்கு கீழ்க்காணும் பொருள் வரையறை (Definition) வழங்கப்பட்டுள்ளது:

"Public purpose" means any purpose which is useful to the public or any class or section of the public."

எனவே மேலே குறிப்பிட்டுள்ள பொருள் வரையரையின்படி பொதுப்பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட 13,342 சதுர மீட்டர் நிலமும் பொது பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். பொதுப் பயன்பாட்டு நிலங்கள் மீது நில உடமைதாரர்கள் உரிமை கோர முடியாது. மேலும், இந்நேர்வில் உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக வழங்கிய பின்பு மேற்படி நிலங்கள் உள்ளாட்சி அமைப்பிற்கு உரிமையாகின்றது. மேலும் இதுபோன்று பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் ஆக்கிரமிப்பு மற்றும் பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தியது போன்ற நிகழ்வுகளில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்திலும் மற்றும் மாண்பமை

உச்சநீதிமன்றத்திலும் பல்வேறு தீர்ப்புகளில் கீழ்க்காணும் கருத்துரைகளைக் குறிப்பிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது:

(i) The open space in a residential area or in busy townships is treated as lung space of the area. It provides fresh air and refreshment to the persons in the neighbourhood. Its presence ameliorates hazards of pollution and it has to be preserved and protected for the sustenance of the men around. It is for the health and well-being of the inhabitants of the residential area. The same cannot be bartered for any other purpose:

(ii) Where open space for constructions of Public Park is preserved and earmarked in the Plan for Development of a planned town, the Authorities cannot ignore or neglect to develop that open space into a public park within reasonable time. The duty of the authorities is to implement the plan in entirely making the area beautiful with attractive public parks;

(iii) The land reserved for public purpose in a layout or in a development plan or master plan approved by the local body cannot be used for any other purpose that the one specified therein.

(iv) The Government cannot change the character of the reservation and is in fact, estopped from de-reserving the same to the benefit of the individual/owner who sought for a sanction of the lay out.

(v) The land owners have no Right to deal with it as he pleases and the land reserved as for public purpose would continue to remain so and no individual can claim ownership over the property.

(vi) The sanction of the layout made subject to condition of reservation of the land for the public purpose, the owner of the land had no grievance at all therein to this condition:

(vii) The effect of the reservation is that while losing his exclusive right as a legal owner thereby, restricting the rights of the owners for selling or transferring his interest in it, the owner holds the land for the benefit of the society creating an obligation in the nature of trust.

(viii) Once such permission is accorded and in that permission if a specified area is earmarked for Public purpose, even the planning Authority shall not have power to exempt that land for being put to use for any other purpose. In that context the State Government also cannot have any jurisdiction to alter the conditions imposed in the layout, whereby certain lands are earmarked as open space to be used for public purposes:

(ix) Reserving any site for any street, open space, park, school etc., in a layout plan is normally a public purpose as it is inherent in such reservation that it shall be used by the public in general. The effect of such reservation is that the owner ceases to be a legal owner of the land in dispute;

(x) Public amenities and utilities, such as park, streets, roads, earmarked under the scheme cannot be encroached upon by any person and that conversion of the land for any other purpose is not permissible even by the local body on its own. It should be borne in mind that the plan for the scheme has been approved by the Director of Town and Country Planning, Chennai and therefore without their approval, no changes can be made, regarding the utility of any portion, earmarked for the public.

(xi) Merely, because no park was created by the Corporation that does not mean that a vacant land, under the scheme can be encroached upon by an

allottee or any other person, to alter or convert the purpose, for which, the land has been earmarked.

(xii) Land encroachements were like cancer that slowly ate lung spaces of lands and definitely will be no breathing space for any one on earth.

(xiii) The public interest in the reservation and preservation of open spaces for parks and play grounds cannot be sacrificed by leasing or selling such sites to private persons for conversion to some other user. Any such act would be contrary to the legislative intent and inconsistent with the statutory requirements. Furthermore, it would be in direct conflict with the constitutional mandate to ensure that any State action is inspired by the basic values of individual freedom and diginify and addressed to the attainment of a quality of life which makes the guaranteed rights a reality for all the citizens.

(xiv) Reservation of open spaces for parks and playgrounds is universally recognized as a legitimate exercise of statutory power rationally related to the protection of the residents of the locality from the ill effects of urbanization.

மேற்குறிப்பிட்டவாறு பல்வேறு வழக்குகளில் மாண்பமை உச்சநீதிமன்றத்தாலும் உயர்நீதி மன்றத்தாலும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவாறும், வலியுறுத்தப்பட்டுள்ளவாறும், மனைப் பிரிவுகளில் பொது உபயோகத்திற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வது மற்றும் வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும்.

**விரிவான விசாரணைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் பின்வருமாறு ஆணையிடுகிறது :**

- ஸ்ரீரங்கா அவின்யூ, மனைப்பிரிவில் சாலைகள், பூங்கா மற்றும் பொது உபயோகத்திற்காக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அங்கீகாரம் பெற்ற அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிலம் ஆவண எண்.5763/1999-ன்படி அம்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக எழுதி கொடுக்கப்பட்டு புழல் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு 2011-ல் மேற்படி இடம் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதால், தற்பொழுது கடந்த 2011-ஆம் ஆண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமாக உள்ளது. மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி நிலத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் அம்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தங்களுக்கு உரிமையில்லாத சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தை ஆவண எண்.10341/2011 என்ற எண்ணிட்ட விடுதலை பத்திரம் மற்றும் ஆவண எண். 13756/2011 என்ற எண்ணிட்ட செட்டில்மென்ட் பத்திரம் என போலியாக உறவுகளுக்குள் உருவாக்கப்பட்ட இரண்டு ஆவணங்களை ரத்து செய்திட வேண்டி வட்டாட்சியர் அலுவகத்திற்கு 10.7.2019 மற்றும் 21.2.2020 ஆகிய நாட்களில் கடிதம் அனுப்பப்பட்டு வட்டாட்சியரிடமிருந்து எவ்வித பதிலும் மண்டல அலுவலகத்தில் பெறப்படவில்லை என தெரிவித்திருப்பதும். அதன் பின்னர் இரண்டு வருடங்களாக தொடர் நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்தது மாநகராட்சி அலுவலர்களின் அலட்சிய மற்றும் மெத்தனப் போக்கை காண்பிக்கிறது. இதனை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுத்து போலியாக உறவுகளுக்குள் உருவாக்கப்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய

நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட சாலைகள் தொடர்பாக போலியாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடர வேண்டி **10.8.2019ல்** காவல்துறையிடம் கடிதம் அளிக்கப்பட்டு, காவல் துறையால் நில அபகரிப்பு தொடர்பாக குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதையும் துரிதப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

- மேற்படி போலியாக தங்களது உறவுகட்குள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி நிலத்திற்கு மாதவரம் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டா (பட்டா எண்.3576) குறித்த பதிவேடுகள் மற்றும் மூல கோப்புகள் கிடைக்கப்பெறவில்லை என மாதவரம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தெரிவித்ததை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், இந்நேர்விற்கு காரணமான மற்றும் துணை போன மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்தின் உதவியாளர் முதல் வட்டாட்சியர் வரை பணியிலிருந்த மற்றும் பணியிலிருக்கும் அனைவரையும் பொறுப்பாக்கி அவர்கள்மீது நடைமுறையிலுள்ள சட்ட விதிகளின்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க சென்னை மாவட்ட ஆட்சியருக்கு இம்முறைமன்றம் நடுவம் பரிந்துரைக்கிறது.
- மேற்குறிப்பிட்ட மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயரில் பட்டா பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பூங்கா அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட மேற்படி இடத்தில் பூங்கா அமைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-3ன் மண்டல அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- முறைகேடாக பட்டா மாற்றம் செய்தவர்கள் மீது காவல்துறை மூலம் உரிய குற்றவியல் நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 3ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் உத்தரவிடுகிறது.

The act of issuing a land title in favour of Tvl. Gopal, Saroja, Valliammal by the Taluk Office, Madhavaram is against rules and procedure when the land has been gifted to the local body, by a legal deed in 1999 itself. The Revenue Officials who committed this wanton and unlawful act should be identified and suitable disciplinary action shall be taken against every one involved in the patta scam.

To state that the original files are missing in the Madhavaram Taluk Office heightens the mystery and suspicion shrouding this case. The District Collector of Chennai is instructed to pursue effective and prompt action in this regard without delaying the process.

The fraud committed by the Sub-Registrar Office, Ambatur by registering the document in the name of Gopal after 12 years from the date of gift settlement issued in favour of the local body in the year 15.12.1999. without due verification and cross-checking deserves to be undone by strict disciplinary action against the Sub-Registrar responsible for the high handedness, duplicity and cheating the Government entity of the Local Body. The Inspector General of Registration, Chennai is requested to identify the

delinquents of the Ambattur Sub Registrar's Office responsible for this unlawful registration and intiate strict disciplinary action against them at the earliest.

2022–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. சி. வேல்முருகன்,
எண்.26, பிளாட் எண்.ஜி.1,
ஆர்.ஆர்.ஹோம்ஸ்,
சுந்தோஷ் நகர், 4வது தெரு, டீச்சர்ஸ் காலனி,
கொளத்தூர், சென்னை – 600 099.

2) திரு. K.V. வெங்கடரத்தினம்,
பிளாட் எண்.G1, ஆர். ஆர். ஹோம்ஸ்,
சந்தோஷ் நகர், டீச்சர்ஸ் காலனி 4வது தெரு,
கொளத்தூர்,
சென்னை – 600 099.

3) திரு.G. கோபால்,
த/பெ. (லேட்) கணேசன்,
14, விநாயகர் கோயில் தெரு,
புத்தகரம் கிராமம்,
லட்சுமிபுரம் அஞ்சல், சென்னை – 600 081.

4) திருமதி. சரோஜா,
C/o. திரு. G. கோபால்,
14, விநாயகர் கோயில் தெரு,
புத்தகரம் கிராமம், லட்சுமிபுரம் அஞ்சல்,
சென்னை – 600 081.

5) திருமதி. வள்ளியம்மாள்,
C/o. திரு. G. கோபால்
14, விநாயகர் கோயில் தெரு,
புத்தகரம் கிராமம்,
லட்சுமிபுரம் அஞ்சல்,
சென்னை – 600 081.

6) மண்டல அலுவலர்,
மண்டலம் - 3, பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.01, தட்டான்குளம் சாலை,
மாதவரம், சென்னை – 600 060.

7) பதிவுத்துறை தலைவர்,
எண்100, சாந்தோம் நெடுஞ்சாலை,
பட்டினப்பாக்கம்,
சென்னை–600 028.

8) மாவட்ட ஆட்சியர்,
சென்னை மாவட்டம், சென்னை.

9) சார் பதிவாளர்,
அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகம்,
அம்பத்தூர், சென்னை – 600 053.

10) வட்டாட்சியர்,
மாதவரம் வட்டாட்சியர் அலுவலகம்,
பாலாஜி நகர், காந்தி மெயின் ரோடு,
புழல், சென்னை – 600 056.

11) முதன்மை செயலளாளர்/ஆணையர்
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

12) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்